## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 95 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் முன்பக்கத்தில் வெளிப்படுத்த வேண்டிய மூலதன ஒதுக்கம், வருமான ஒதுக்கம், நுகர்வோர் பாதுகாப்பு நிதியம் மற்றும் திரண்ட இலாபம்/நட்டம் என்ற விடயங்களின் பெறுமதி முறையே ரூபா 10,102,000 தொகை, ரூபா 17,048,000 தொகை, ரூபா 63,190,913 தொகை, ரூபா 514,903,552 முன்பக்கத்தில் அல்லது குறிப்புக்களின் மூலம் தனித்தனியாக வெளிப்படுத்தப்படாமல் மூலதனம் மற்றும் ஒதுக்கமாக ரூபா 605,244,465 கூட்டு மொத்தமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மற்றும் வருமான ஒதுக்கங்கள் தனித்தனியாக சமர்ப்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதி நிலைமைக் கூற்றில் முன்பக்கத்தில் அல்லது குறிப்புக்களின் மூலம் மூலதனம் மற்றும் வருமான ஒதுக்கங்கள் தனித்தனியாக வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 99 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டிற்குரிய செலவினங்கள் அந்த ஆண்டில் கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் | சட்ட நடவடிக்கை முடிவடைந்த ஆண்டை அடிப்படையாகக் கொண்டு சட்டமாதிபர் திணைக்களத்தின் | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியம பிரகாரம் ஆண்டிற்குரிய சகல செலவினங்களும் |

| | | | |
|---|---|---|---|
| | போது செலுத்தப்பட்ட 2020 முதல் 2023 வரையான 04 வருடங்களுக்கு உரிய கூட்டு மொத்தமாக ரூபா 1,216,750 ஆன சட்ட செலவினம், உரிய ஆண்டின் போது இனங்காணப்படாமல் மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தால் அதிகரிதத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் இறுதிக் காலாண்டிற்கான கட்டிட வாடகை செலவினமாக இனங்காணப்படாமையின் காரணமாக ரூபா 8,716,125 இனால் செலவினம் குறைத்தும் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | பட்டியல் விநியோகிக்கப்படுகின்ற மையால் 2024 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட சட்டக் கட்டணம் அந்த ஆண்டின் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. காணப்படுகின்ற வாடகை உடன்படிக்கை 2024.09.30 ஆந் திகதியில் முடிவடைந்து இருந்ததுடன் மிகுதிக் கால எல்லையில் செல்லுபடியான வாடகை உடன்படிக்கை மற்றும் குறித்துரைத்த வாடகை அளவு தொடர்பாக அறிவித்தலும் அறிவிக்கப்படாது இருந்தமையால் அந்த கால எல்லைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட வில்லை. | சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | ஆண்டில் வருமான மானியமாக கிடைக்கப் பெற்ற ரூபா 1,745,832 இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 11 இன் பிரகாரம் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கலில் இருந்து கிடைத்த வருமானமாக இனங்காணப்படாமல் பிற்போட்ட வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டுகளில் திறைசேரி மாணியத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த சொத்துக்களுக்கு உரிய ரூபா 61,735,225 பெறுமதி பிற்போட்ட வருமானமாக 2024 சனவரி 01 இல் உள்ளவாறு காண்பிக்கப்பட்டதுடன் உரிய பெறுமதி முன்னைய ஆண்டு வருமானமாக இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மேற்கூறப்பட்ட மானியங்களுக்கு உரிய மீளாய்வாண்டில் காலக் கழிவு பெறுமதியான ரூபா 24,302,242 சீராக்கப்பட்ட பின்னர் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதியாக ரூபா 39,178,817 பிற்போட்ட வருமானமாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டிற்காக கிடைத்த மானியங்கள் நிதிக்கூற்றுக்களில் பிற்போட்ட வருமானமாக பயன்படுத்தப் பட்டமையால் இந்த வழுக்கள் ஏற்பட்டிருந்ததுடன் அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமான மாணியங்கள் மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் இருந்து கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் 76 ஆம் பந்தியின் பிரகாரம் ரூபா 166,977,190 ஆன | கணக்காய்வுப் பரிந்துரைகளின் பிரகாரம் பணிக்கொடை | இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்கு உரிய பின் தொடர் சேவை நலன் கடப்பாடு மற்றும் தொடர்புடைய மேம்படுத்தல் சேவைக் கிரயம் தற்போதய பெறுமதி கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பணிக்கொடை ஒதுக்கீடுகளுக்கு உரிய தற்போதய பெறுமதி கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் செலவிடப்பட்ட ரூபா 417,470 கூட்டுத் தொகையான எரிபொருள் செலவினம், செலவினமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக எரிபொருள் கட்டுநிதியாகக் காண்பிக்கப் பட்டதன் காரணமாக ஆண்டின் பற்றாக்குறை பெறுமானத்தால் குறைத்தும் நடைமுறைப் பொறுப்புக்கள் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்குக் குறிப்புக்களை ஈடுபடுத்தி தவறின் அடிப்படையில் இந்த வழுக்கள் ஏற்பட்டிருந்தது. சரி செய்து கணக்குகளில் குறிப்பிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஆண்டுக்குரிய வருமானம் மற்றும் செலவினங்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்குதல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான முற்பணம் | 5,168,527 | ஊழியர்கள் மற்றும நீதிமன்றங்களில் உள்ள நிலுவை பணம் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் காணப்படுகின்ற தீர்த்து வைக்கப்படாத முற்பணங்களுக்கான பட்டோலைகள் | கட்டுநிதி முற்பணத்தின் மீதி காணப்படுமாயின் ஒவ்வொரு கட்டுநிதியும் நிதியாண்டின் இறுதியின் போது பிரதான அலுவலகத்திற்கு தீர்த்து வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | முற்பணத்திற்காக முறையான பட்டோலை பேணிச் செல்ல வேண்டியிருந்ததுடன் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| அதிகாரசபையின் 23 ஊழியர்களுக்காக வழங்கப்பட்டிருந்த கூட்டுமொத்தமான ரூபா 694,576 ஆன இடர்கடன் 01 முதல் 15 வருட காலம் வரையிலான வீச்சில் அறவிடப்படாமல் காணப்பட்டது. அந்த ஊழியர்களுக்கு இடையே 04 பேர்கள் வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த உத்தியோகத்தர்களாக இருந்ததுடன் அவர்களிடம் இருந்து அறவிட | இந்த ஊழியர்கள் 23 பேர்களுக்கு இடையே 15 பேர்கள் சேவையில் இருக்கின்றமையால் கடன் தவணைப் பணம் அறவிடப்படுகின்றது. வேலை நீக்கத்திற்கு உட்பட்டிருந்த ஊழியர்களின் விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாது | ஊழியர்கள் விலகிச் செல்லும் போது அறவிட வேண்டிய கடன் மீதியை இனங்காணல் வேண்டும். கடன் மீதி நிலுவைக் காலத்திற்கு உரிய வட்டி தொடர்ச்சியாக அறவிடப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| வேண்டிய ரூபா 384,693 ஆன இடர்கடன் தொகை மற்றும் வட்டி இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் சேவையில் இருந்து விலக்கப்பட்ட இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டி இருந்த ரூபா 13,888 ஆன இடர்கடன் மற்றும் வட்டி போன்ற மீதிகளை அறவிடாமல் அவர்கள் இருவரும் விடுவிக்கப்பட்டிருந்தனர். | இருந்தமையால் நிலுவை மீதி விசாரணை முடிவடைந்த பின்னர் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். சேவையில் இருந்து விலகிச் சென்ற ஒருவரிடம் இருந்து மீதி பணிக்கொடையில் இருந்து அறவிட்டு ஏனைய உத்தியோகத்தருக்கு நிலுவைத் தவணைப் பணமாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 1..6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 முதல் 6 வருடங்கள் வரை பழைய கூட்டு மொத்தமான ரூபா 275,295 ஆன செலுத்த வேண்டிய 03 மீதிகளை தீர்த்து வைக்காமல் செலுத்த வேண்டி வைப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இந்த மீதிகளுக்கு உரிய தரப்பினருக்கு விடுவிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிறுத்தி வைக்கப்பட்ட மீதியை தீர்த்து வைப்பதற்கு விரைவாகவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத்தின் 10(1) (ஆ)(ii) பிரிவின் கீழ் 2021 யூன் 11 ஆந் திகதிய இலக்கம் 2231/24 என்ற அதிவிடே வர்த்தமானியின் மூலம் வழங்கப்பட்ட விசேட ஏற்பாடுகள் | 2021 யூன் 15 முதல் நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்கள் அமைந்துள்ள களஞ்சியங்கள் அதிகார சபையினால் பதிவு செய்வதற்காக முறையான வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நாட்டில் அமைந்துள்ள சகல இருப்புக் களஞ்சியங்களையும் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II பகுதியின் 48 ஆம் அத்தியாயத்தின் 22.4 மற்றும் 27.13 ஆம் பிரிவுகள் | i. நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் ஒழுக்காற்றுக் கட்டளை விநியோகிக்கப்படும் வரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் நடாத்திச் செல்ல வேண்டியிருந்த போதிலும் வேலை | தாபன விதிக் கோவை தொகுதி I, அத்தியாயம் I, XVII இன் கீழ் “அரச கூட்டுத்தாபனம்/ நியதிச் சட்ட சபைகளில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒருவர் அரச ஊழியர் தொகுதியில் சேர்க்கப்படமாட்டார்” | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய மற்றும் 2021/01 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொது முயற்சிகளுக்கான கைநூலின் 2.3 இன் பிரகாரம் சகல பொது |

நீக்கத்திற்கு உட்பட்டு இருந்த 04 ஊழியர்களுக்காக நடைபெற்ற நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் அவர்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட ஒழுக்காற்று விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாமல் அந்த ஊழியர்களின் மீண்டும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர்.

ii. 2018 ஆம் ஆண்டின் போது விசாரணை உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்ளும் போது ஏற்பட்ட மோசடிகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று நடாத்தி பணிப்பாளர் (நிர்வாகம் மற்றும் மனிதவளம்) இற்கு எதிராக குற்றப் பத்திரிகை விநியோகிக்கப்பட்டு 2021 பெப்ரவரி 03 ஆம் திகதி முதல் தற்காலிகமாக சேவையில் இருந்து விலக்கப்பட்டிருந்தார் உரிய முறையான ஒழுக்காற்று விசாரணைக்காக 2021 மார்ச் 23 ஆம் திகதி ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 02 வருடங்களும் 06 மாதங்களும் கடந்த பின்னரும் விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாது இருந்ததுடன் இந்த ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தரை அகற்றி 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி மீண்டும் புதிய ஒழுக்காற்று எனக் குறிப்பிடப்பட்டுள்ளமையால் அரசாங்க உத்தியோகத்தர் அல்லாத இந்த அதிகார சபையின் ஊழியர்களுக்காக இந்த பிரிவின் அதிகாரம் அமுல்படுத்தப்படுவது இல்லை. சுயாதீனமாக ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல் அதிகார சபையின் ஊழியர்களுக்காக கட்டாயம் அல்லாது இருந்ததுடன் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதிகார சபையின் ஒழுக்காற்று அதிகாரியான பணிப்பாளர் சபையினால் 2023.06.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த ஊழியரை மீண்டும் சேவையில் அமர்த்துவதற்கும் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக காணப்படுகின்ற சான்றிதழின் பிரகாரம் அவருக்கு தண்டணையாக வேலை நீக்கத்திற்கு உட்பட்ட காலத்திற்கு நிலுவை சம்பளம் செலுத்தாது இருப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

முயற்சிகளுக்காகவும் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகம் மற்றும் நிதி பிரமாணக் கோவை காணப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் அவ்வாறு தயாரிக்கப்படாது இருந்தமையால் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவடைந்த போதிலும் ஒழுக்காற்றுப் பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்ச்சியாக நடாத்தி பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தார். இந்த ஒழுக்காற்று விசாரணைகளை பூர்த்தி செய்வதற்கு முன் பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் ஒழுக்காற்று பரிசோதனைகள் நிறுத்தப்பட்டு 2024 மே 24 ஆந் திகதி மேற்கூறப்பட்ட ஊழியர் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தார். | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 66(2)(இ) மற்றும் 66(3)(ஆ) | மீளாய்வாண்டின் போது மீண்டெழும் செலவினத்திற்காக திறைசேரியில் இருந்து கிடைத்த தொகையில் ரூபா 1,745,833 திறைசேரி செயலாளரின் அல்லது அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. | தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தில் இருந்து நிதியேற்பாடு கோரும் எண்ணத்தில் மீண்டெழும் செலவின கணக்கில் இருந்து மூலதன செலவினக் கணக்கிற்கு உரிய தொகை மாற்றப்பட்டிருந்தது. நிதியேற்பாடு மாற்ற முடியாது என அறிவித்தமையின் காரணமாக மாற்றியதற்குரிய பதிவுகள் சரி செய்ய வேண்டி உள்ளது. | அரசாங்கத்தின் நிதியேற்பாடுகள் வழங்கப்பட்ட நோக்கங்கள் தவிர ஏனைய பணிகளுக்காக ஈடுபடுத்தும் போது முறையான பிரகாரம் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 373 | 07 மாவட்ட அலுவலகங்களில் ரூபா 951,575 கூட்டுத் தொகையான எரிபொருள் கட்டுநிதி மீதியும், 08 அலுவலகங்களில் கூட்டு மொத்தமாக ரூபா 151,578 ஆன நிலுவைப் பண கட்டுநிதி மீதியும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி உள்ளவாறு பிரதான அலுவலகத்திற்கு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | முற்பண மீதிகள் ஆண்டின் இறுதியின் போது பிரதான அலுவலகத்திற்கு தீர்த்து வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் முற்பண மீதிகள் குறித்துரைத்த திகதியில் தீர்த்து வைப்பதற்கான முறையான திட்ட முறைமை ஒன்று அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய | வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் | 2023 இன் அறிக்கை அமைச்சுக்கு | 2023 மற்றும் 2024 இன் வருடாந்த |

| | | | |
|---|---|---|---|
| இலக்கம் 2021/01 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் அறிமுகப்படுத்தப் பட்ட பொது முயற்சிகளுக்கான வழிகாட்டிக் கோவை | சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கு உரிய வருடாந்த அறிக்கை 2025 ஆகஸ்ட் 30 வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் அறிக்கை மொழி பெயர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | அறிக்கை விரைவாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 23,699,000 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 66,085,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 89,784,000 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு அரசாங்கத்தின் மானியம் ரூபா 43,419,000 இனாலும், தண்டப்பண வருமானம் ரூபா 29,359,000 இனாலும் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 20,128,000 இனாலும் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2003 இன் 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சட்டத் திருத்தம் 2004 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப் பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையில் 20 வருடங்கள் கடந்திருந்த போதும் அந்த திருத்த நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக வட்ட வரைஞர் திணைக்களத்திற்கும், சட்ட மாதிபர் திணைக்களத்திற்கும் வியாபார, வணிக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சிற்கும் பல்வேறு பரிந்துரைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு தேவையான பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2025.04.29 ஆம் திகதி அமைச்சின் போது இதற்கு உரிய அமைச்சு உத்தியோகத்தர்கள் மற்றும் அதிகார சபையின் பங்கு பற்றலுடன் கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சட்டத் திருந்தங்களுக்கு உரிய மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | தற்போதய நிலைமைக்கு ஈடு கொடுக்கும் வகையில் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு பூர்த்தி செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரால் தீர்மாணிக்கப்படுகின்ற ரூபா ஒரு இலட்சத்தை விஞ்சாத வருடாந்த கட்டணம் செலுத்தும் அடிப்படையில் ஒவ்வொரு | வியாபாரிகளைப் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது வியாபாரிகளைப் பதிவு செய்வதற்குத் தேவையான | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சகல வியாபாரிகளும் அதிகார சபையில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| வியாபாரிகளுக்கும் அதிகார சபையில் பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையால் வியாபாரிகள் பதிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மென்பொருள் மற்றும் தரவு முறைமை தயாரிப்பதற்காக நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்வதற்காக பெறுகை நடைமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | எடுத்தல் வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பற்ற மற்றும் தரம் குறைவான உற்பத்தியாளர்களிடம் இருந்து நுகர்வோர்களைப் பாதுகாப்பதற்காக இனங்காணப்பட்ட சில உற்பத்திகள் தொடர்பாக பாதுகாப்பு திட்ட முறைமை ஒன்றைத் தயாரிப்பதற்காக சுவீச்சர்லாந்தின் கம்பனி ஒன்றுடன் 2014 சனவரி 24 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அது தொடர்பாக விநியோகிக்கப்பட்ட ஏற்பாட்டு இலக்கம் 49 ஐ வலு இழக்கச் செய்வதற்காக பொருட்கள் உற்பத்தி கம்பனி சிலவற்றினால் அதிகார சபைக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கிற்காக மேல் நீதிமன்றத்தின் மூலம் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல் தடுக்கும் இடைக்கால உத்தரவு விநியோகித்தன் காரணமாக கம்பனியுடன் கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முன் கொண்டு செல்வதற்கு முடியாது இருந்தது.<br>உடன்படிக்கை அமுல் படுத்தப்படாமையின் காரணமாக உடன்படிக்கை செய்த கம்பனியினால் ஒரு தரப்பாக உடன்படிக்கை இரத்துச் செய்து உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த முதலீட்டுத் தொகையான ரூபா 2.716 பில்லியன் தொகை செலுத்துமாறு கோரி அதிகார சபைக்கு எதிராக 2018 ஆம் ஆண்டின் போது சர்வதேச நியாய சபை நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டிருந்தது. நியாய சபை வழக்கிற்காக இறுதி தீர்ப்பு அதாவது 2022 மே 10 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த கட்டளையின் பிரகாரம் அதிகார சபையால் கம்பனிக்கு 2.716 பில்லியன், நியாய சபைக் கட்டணமாக அ.டொலர் 325,000 தொகையும் செலுத்த வேண்டி இருந்தது. நியாய சபை வழக்கின் இறுதி தீர்ப்பிற்கு எதிராக 2022 யூலை 07 ஆந் திகதி அதிகார சபையால் கொழும்பு வணிக நீதிமன்றத்தில் | சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் அடிப்படையில் அதிகார சபையால் CHC 626/2023 வழக்கு 2022 யூலை 07 ஆந் திகதி தொடரப்பட்டிருந்தது. 2024.05.07 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழு (COPE) கூட்டத்தின் போது வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் உடன்படிக்கை அமுல்படுத்தல் தொடர்பாக ஏதாவது மோசடிகள் இடம் பெற்றிருக்கின்றதா என கண்டறிவதற்கு அதிகார சபையால் பரிசோதனை சபை ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் எந்த ஒரு மோசடி அல்லது முறைகேடுகளோ ஏற்பட்டு இருந்ததா என கண்டறிந்து அறிக்கை இடுவதற்காக ஆரம்ப விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் ஆரம்ப விசாரணைகள் நடாத்துதலின் தாமதத்தின் காரணமாக ஏனைய ஆரம்ப விசாரணை உத்தியோகத்தர் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களம் கோரி இருந்ததுடன் அவர்களின் விடயப் பரப்பிற்கு இல்லாது இருந்தமையால் வழக்கு | அமுல்படுத்தும் இயலுமையை உறுதிப்படுத்தியதன் பின்னர் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் உள்ளக பரிசோதனை ஒன்றின் மூலம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| முறைப்பாடு ஒன்று தொடரப்பட்டிருந்ததுடன் அது தொடர்ந்தும் விசாரணையின் காணப்படுகின்றது. மேலும் 2024 மே 07 ஆந் திகதி நடைபெற்ற பாராளுமன்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்திலும் உடன்படிக்கை தொடர்பாக விசாரணைகள் நடாத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்குமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் அதிகார சபையால் உள்ளக விசாரணை ஒன்று நடாத்தி பொறுப்பு வாய்ந்த தரப்பினர் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | நடவடிக்கைகள் இலஞ்ச ஊழல் விசாரணைப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 3.4 மனத வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இன் உள்ளவாறு அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 667 ஆக இருந்ததுடன் அதில் 223 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டது. அதில் உயர் முகாமைத்துவ நிலையில் 03 பதவிகள், நடுத்தர முகாமைத்துவ நிலையில் உதவிப் பணிப்பாளரில் 19 பதவிகள் மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் விசாரணை உத்தியோகத்தர்களில் 132 பதவிகளும் காணப்பட்டது. | அரச செலவினங்களை கட்டுப்படுத்தல் தொடர்பாக சனாபதி அலுவலகம் மற்றும் நிதி அமைச்சின் தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஊழியர்களை சேர்த்தல்களை பிற்படுத்துமாறு கோரியிருந்தமையால் ஆட்சேர்ப்புக்கள் தாமதமாக மேற்கொள்ளப்பட்டதைக் குறிப்பிடுகின்றோம். எனினும் நிறுவனத்தின் தேவையின் பிரகாரம் கடமைகளை செயற்திறனாகவும் தொடர்ச்சியாகவும் மேற்கொண்டு செல்வதற்காக விசாரணை உத்தியோகத்தர்களின் உதவியும் பெறப்பட்டிருந்தது. | அத்தியாவசியமான உயர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு மட்டங்களின் பதவி வெற்றிடங்களை நிரப்பி சட்டத்தின் நோக்கத்தை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அதிகார சபையின் 2024 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மூன்று செயற்பாடுகள் அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் அவ்வாறான ஆறு செயற்பாடுகளின் செயல் | உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட செயல் முன்னேற்றத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது. வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்ட | பொருத்தமான திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டி இருந்ததுடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்னேற்றம் 23 இற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலான மட்டத்தில் காணப்பட்டது. | பின்னர் இந்த குறைபாடுகள் சரி செய்யப்படும். | |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(ஊ) பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு இலக்கினை உரிய பிரகாரம் அமுல்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான திட்ட முறைமை ஒன்று காணப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அதிகார சபையின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வு உத்தியோகத்தர் மற்றும் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிகளில் இரண்டிலும் வெற்றிடங்கள் முறையான பிரகாரம் நிரப்புவதற்காக அதிகார சபையால் அமைச்சு ஊடாக உரிய நிறுவனத்திற்கு அறிக்கை இடப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |